# புக்கிட் ஜெலுத்தோங்கில் அலுவலகக் கட்டடம்

# சைம் டார்பி சொத்துடைமை யுஇஎம் சன்ரைஸ் திட்டம்



ஷா ஆலம், புக்கிட் ஜெலுத்தோங் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி மக்கள் பயனடையும் வகையில் சைம் டார்பி சொத்துடைமை நிறுவனமும் யுஇஎம் சன்ரைஸ் நிறுவனமும் இணைந்து அலுவலக கட்டடமொன்றை அமைக்கவிருக்கின்றன.

இயற்கை எழில், பாரம்பரியம் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த புக்கிட் ஜெலுத்தோங்கில் ராடியா அலுவலகங்கள் கொண்ட 159 அடுக்குமாடி அலுவலகங்கள் கட்டப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு அலுவலகமும் 825 சதுர அடி தொடங்கி 2,001 சதுர அடி வரையிலான பரப்பளவைக் கொண்டிருக்கும். நிறுவனங்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் பொருத்தமான அலுவலகங்களாக இவை திகழும் என்று கூறப்படுகின்றது.

ராடியா அலுவலக கட்டட நிர்மாணிப்பு தொடர்பான அறிமுக விழா ஷா ஆலமில் அண்மையில் நடைபெற்றது.

"சைம் டார்பி சொத்துடைமை யுஇஎம் சன்ரைஸ் நிறுவனத்தின் விவேக பங்காளித்துவத்தின் பலனாக 'புளோக் ஏ ராடியா அலுவலகங்களை அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டோம். புக்கிட் ஜெலுத்தோங் நேர்த்தியான மற்றும் மக்களின் வளமிக்க வாழ்க்கை முறைக்கு ஏற்ற ஒரு பகுதியாகும்" என்றார் சைம் டார்பி சொத்துடைமை நிறுவனத்தின் இடைக்கால நிர்வாக இயக்குநர் டத்தோ இஞ்ஜினீயர் ஜாவ்ஹாரி ஹமிடி.

அதே சமயம், இப்புதிய மேம்பாட்டுத் திட்டம் சுற்றுவட்டார மக்களுக்கு அதிகமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும். இது நீடித்த சமூக மேம்பாட்டிற்கு மற்றொரு மைல் கல்லாக அமையும் என்றார்.

" ராடியா அலுவலகங்களைக் கொண்ட முதலாவது புளோக் ஏ கட்டட நிர்மாணிப்பை பொது மக்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இதர இரு புளோக்குகளோடு ஒட்டுமொத்த ராடியா மேம்பாடு புக்கிட் ஜெலுத்தோங் மக்களுக்கு நீடித்த வெற்றியையும் வளப்பத்தையும் வழங்கும். மிகப் பெரிய மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பிரசித்தி பெற்ற எங்களின் சாதனைப் பட்டியலில் இத்திட்டமும் நிச்சயம் இடம் பெறும்" என்றார் யுஇஎம் சன்ரைஸ் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அன்வார் ஷாஹ்ரின் அப்துல் அஜிப்.

இந்த அலுவலக கட்டடம் ஷா ஆலம், கிள்ளான், கோலாலம்பூர் ஆகிய முக்கிய நகர்களுக்கு அருகே அமைந்துள்ளது. ஆகையால், இவற்றில் குடிபுகுவோருக்கு நல்ல வசதியை ஏற்படுத்தித் தரும் என்பது திண்ணம் என்றார் அன்வார்.

இதற்கு முன்பு சைம் டார்பி சொத்துடைமை நிறுவனமும் யுஇஎம் நிறுவனமும் இணைந்து 1.6 பில்லியன் வெள்ளி திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டது. இதன் தொடர் திட்டமே இந்த ராடியா அலுவலக கட்டட நிர்மாணிப்பு. புக்கிட் ஜெலுத்தோங் மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக வர்த்தக, அலுவலகம் உல்லாச மையங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேம்பாட்டுத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.